ஸ்ரீசக்தி

ஆசிரியர்
நா.மகாலிங்கம்



பிப்ரவரி '97
விலை ரூ. 5

அறிவியல் கதை

டி.வி. பார்க்கிற குண்டுப் பையா!

ருத்ர. துளசிதாஸ்

"டேய்! வாடா, விளையாடப் போகலாம். புறப்படாமே இன்னும் என்னடா பண்றே?"

சைக்கிள் பெடலில் ஒரு காலும் வாசல் படிக்கட்டில் ஒரு காலுமாக நின்றபடி சபாபதியை ரங்கன் கூப்பிட்டான். ரங்கன் எப்போதுமே ஒரு துருதுரு. அங்குமிங்குமாக எப்போதும் இயங்கிக் கொண்டே இருப்பான்.

"நான் இன்னிக்கு வரல்லேடா. ஊர்லேருந்து எங்க சித்தப்பா வந்திருக்கார். கூடவே விவேக்கும் வந்திருக்கான். ரெண்டு பேருமா வீடியோ கேம் விளையாடப் போறோம்."

"என்னடா திடீர்னு காலை வாரிட்டே? தாமர காலனி பசங்க நம்மளை இன்னிக்குக் கால்பந்து மேட்சுக்குக் கூப்பிட்டிருக்காங்களே, மறந்திட்டியா?"

"மறக்கலேடா. ஆனால் எனக்கு அலுப்பா இருக்கு. பகல் முழுக்க வீட்டுக் கணக்குப் போட்டு மண்டை வீங்கிப் போயிருக்கு. என்னை ஆளை விடுடா!"

"நீதாண்டா சரியான கோல் கீப்பர். நீ வரல்லேன்னா நம்ம காலனி நிச்சயம் தோத்துத்தான் போகும். அதுக்குச் சம்மதம்னா நீ இங்கேயே இருந்துக்கோ. வர வர உன் போக்கே சரியில்லே, அவ்வளவுதான் நான் சொல்லுவேன். அப்புறம் உன் இஷ்டம்!"

"டேய், கோவிச்சுக்காதே. எனக்கு இப்போ அசதி அதிகமாயிடுது; தெம்பா இருக்க முடியலே."

வாசலில் சந்தடி கேட்டு சபாபதியின் அம்மாவே வந்து விட்டார்கள்.

"என்னடா ரங்கா, வீட்டுக் குள்ளே வராமல் வாசல் படியிலேயே பேசிக்கிட்டிருக்கீங்க? உள்ளே வாயேன்!"

"இன்னிக்கு மேட்ச் இருக்கு. இவனைக் கூப்பிட்டா வரமாட்டேங் கறான். இப்பல்லாம் ரொம்பத்தான் மாறிப்போயிட்டான்."

"நீ உள்ளே வா. கொஞ்சம் வெயில் குறையட்டும். அப்புறம் விளையாடப் போகலாம். இவனுக்கு டி.வி. பார்க்கிறதே வேலையாப் போயிடிச்சி." அம்மாவே அவனைப் பற்றிக் குறைபட்டுக் கொள்வது ரங்கனுக்கு ஆச்சரியமாக இருந்தது. "டி.வி. பார்க்கிறப்போ அதிலே விளம்பரத்திலே வருகிறதையெல்லாம் வாங்கித் தரச் சொல்றான். அதையெல்லாம் வாங்கிச் சாப்பிட்டு வரவர இப்போ குண்டாயிட்டான்;

சோம்பேறித்தனமும் அதிகமா யிடிச்சி."

சபாபதிக்கு சுருக்கென்றது. அம்மாவை முறைத்துப் பார்த்தான்.

"அங்கே என்ன கலாட்டா?" என்று விளம்பரப் பாணியில் சபா பதியின் சித்தப்பாவும் வந்து சேர்ந்தார். அம்மா விவரத்தைச் சொன்னதும் அவர் சபாபதியின் முதுகில் தட்டிக் கொடுத்தபடி சிரித்துக் கொண்டே சொன்னார்.

"அதனாலேதான் மேல்நாடுகள் சிலதுலே தடை விதிச்சிருக்காங்க. சின்னக் குழந்தைகளை விளம்பரங் களிலே பயன்படுத்தி உணவுப் பண்டங்களை விற்பனை செய்யக் கூடாதுன்னு அரசாங்கமே தடை பண்ணியிருக்கு."

"சித்தப்பா சொல்றதைக் கேட்டுக்கோடா, தடியா. இனிமே அதை வாங்கு, இதை வாங்குன்னு அடம் பிடிச்சே தோலை உரிச்சிப்பிடு வேன்."

அம்மாவின் ஆத்திரத்தில் மகிழ்ச் சியும் கலந்திருந்தது.

சித்தப்பா தொடர்ந்தார். "உள்ளே வாங்க, எல்லாரும் உட்கார்ந்து பேசுவோம். இதைப் பற்றி நிறையச் சொல்ல வேண்டியிருக்கு."

அவரைச் சுற்றி எல்லோரும் உட்கார்ந்து கொண்டார்கள். பேச்சு தொடர்ந்தது.

"இப்போ குழந்தைங்க முதல் கொண்டு எல்லாருமே அதிகமா டி.வி. பார்க்கிறாங்க. இதனாலே மூளைத் திறன் வளருது, பொதுஅறிவு வளருது என்கிறதெல்லாம் உண்மைதான். ஆனால் அதே சமயத்தில் உடல் பருமனும் அதிகமாகுது என்கிற தையும் கவனிக்கணும். இங்கிலாந் திலே மெடிக்கல் சென்ட்டர் என்ற நிறுவனத்திலே விநியம் டேஜ் என்கிறவர் ஆராய்ச்சி ஒண்ணு பண்ணினார். விடுமுறை நாட்களிலே மட்டும் குழந்தைகள் உடல் பருமன் கடந்த இருபது வருடங்களாக அதிகரிச்சிக்கிட்டே வர்றதாக அவர் புள்ளி விவரங்களோடே சொல்லி யிருக்காரு. பணக்கார நாடுகளிலே அப்பா, அம்மா ரெண்டு பேருமே வேலைக்குப் போயிடுவாங்க. அத னாலே சின்னக் குழந்தைகளை கவனிச்சிக்கிடுறதுக்கு "பேபி சிட்டர் கள்" என்கிற ஆயாக்களை நியமிச் சிடுவாங்க."

"இங்கேயும் அந்த வழக்கம் வந்திருச்சே! நம்மா காலனியிலேகூட முக்கால்வாசிப் பேர் வேலைக்குப் போகிறவங்கதானே?" சபாபதியின் அம்மா குறுக்கிட்டுச் சொன்னதும் சித்தப்பா தலையாட்டிக் கொண்டு தொடர்ந்தார்.

"ஆமாம், நம்ம இந்தியாவும் வளர்ந்துக்கிட்டிருக்கிற நாடுதானே? நமக்கும் அது பொருந்தும்.... அவருடைய ஆராய்ச்சியிலே ஆறு வயது முதல் பதினோரு வயது வரையிலான குழந்தைகளை அடிப் படையா வச்சிக் கணக்கிட்டதிலே அவங்களோடே உடல் பருமன் முன்னே இருந்ததைவிட 54 சதவிகிதம் அதிகமானது தெரிஞ்சது."

"தொலைக்காட்சி பார்த்தால் கண்ணுக்குத்தானே கெடுதல் வரணும்? எதுக்கு உடம்பு பருமனா கணும்?" என்று வகுப்பில் கேள்வி கேட்கும் தோரணையில் சபாபதியின் தங்கை மீனுக்குட்டி குறுக்கிட்டாள். ஒட்டு மொத்தமாக இனிமேல் தொலைக்காட்சியே பார்க்கக் கூடாது என்று அம்மா சொல்லி விடுவார்களோ என்ற பயம் அவளுக்கு. ஏற்கெனவே அவள் ஒரு 'சோடா பாட்டில்.'

"ரொம்பவும் பயந்திடாதே. தொலைக்காட்சியை தாராளமாகத் தினமும் பார்க்கலாம், ரசிக்கலாம்"

என்று சித்தப்பா சொன்னதும், அம்மாவைப் பார்த்து அசட்டுச் சிரிப்புச் சிரித்தபடி மீனா கண்ணாடியைத் தூக்கி விட்டுக் கொண்டாள். அது சித்தப்பாவுக்கு நன்றி சொல்வது போல இருந்தது.

சித்தப்பா தொடர்ந்தார்.

"விநியம் டேஜ் ஆராய்ச்சிக் கருத்துப்படி, தொலைக்காட்சி மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் விளம்பரப் படுத்தப்படும் பெரும்பாலான உணவுப் பண்டங்கள் வெப்ப ஆற்றலை - அதாவது கலோரி அளவு - அதிகம் கொண்டவையாகவும், அதே சமயம் ஊட்டச் சத்து குறைவானவையாகவும் இருக்கு. தொலைக்காட்சிப் பழக்கம் வர்றதுக்கு முன்பெல்லாம் குழந்தைங்க நிறைய நேரம் விளையாடினாங்க. அப்போவெல்லாம் உடம்பிலே அதிகமாக உற்பத்தியாகிற வெப்ப ஆற்றல் விளையாடுகிற பழக்கத்தினாலே வெளியேறிச் சமனமாகிக் கிட்டிருந்தது. ஆனால் இப்போ தொலைக்காட்சி பார்க்கிறேன் பேர்வழின்னு ஒரு நாளின் பெரும்பகுதியான நேரத்தை வீட்டிலே அறைக்குள்ளேயே செலவழிச்சி பசங்க முடங்கிப் போயிடறாங்க. அதனாலே அதிகப்படியாக உருவாகிற வெப்ப ஆற்றல் பயன்படுத்தப் படாமல் உடம்பிலேயே தேங்கிவிடுது. இந்தக் காரணத்தினாலே உடம்பு பெருத்துப் பருமனாகிவிடுது."

'டிவி. பார்க்கிறதிலே இவ்வளவு விஷயம் அடங்கியிருக்கா!' என்று அம்மாவுக்கு ஒரே ஆச்சரியம்.

"சரி, நானும் வர்றேண்டா!" என்று சபாபதியும் ரங்கனுடன் விளையாடக் கிளம்பினான். வீடியோ கேமை மறுநாள் வெயில் நேரத்தில் ஆடிக் கொள்ளலாம் என்று அவன் மனதுக்குள் திட்டமிட்டுக் கொண்டான்.

"ரொம்ப தாங்க்ஸ் மாமா!" என்று துள்ளிக் குதித்தான் ரங்கன். ஊரிலிருந்து வந்திருந்த விவேக்கும் அவர்களுடன் கிளம்பத் தயாரானான்.

"மீனுக்குட்டி, நீயும் விளையாடணும். பள்ளிக்கூடத்திலே விளையாடுகிற வசதி இல்லேன்னா வீட்டிலே ஸ்கிப்பிங் விளையாடு" என்று சித்தப்பா சொன்னதும் மீனா தலையாட்டினாள்; வழக்கம்போலக் கண்ணாடியைத் தூக்கி விட்டுக் கொண்டாள்.

○

இங்கேயும் மைதானத்தில் கூடுவோமா ?

ஜப்பான் தொலைக்காட்சியில் ஒளி பரப்பான காட்சி:-

வெளி உலகு எளிதில் அணுக முடியாத தொலைதூரம். பசிபிக் தீவில் நடந்த, பாரம்பரிய ஆட்சி மாற்றச் சம்பிரதாயத்தை டிவிக்காரர்கள் எப்படியோ படமாக்கி வந்துவிட்டனர்.

இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட ஜனத்தொகையுடைய அந்தத் தீவின் மக்கள் அனைவரும் ஒரு மைதானத்தில் கூடி, ஒரு ராணியைத் தேர்ந்தெடுக் கிறார்கள். அவளை ஒரு பல்லக்கில் ஏற்றிப் பாட்டுப்பாடி நடனமாடி மகிழ்கிறார்கள்.

அவர்கள் சம்பிரதாயப்படி அந்த ராணி இரண்டு ஆண்டுக்காலம் ஆட்சி புரிவாள்.

இரண்டாண்டு முடிந்ததும் மறுபடியும் மைதானத்தில் கூடி, அவருக்கு மாலையிட்டுப் பல்லக்கேற்றிப் பாட்டுப்பாடியபடியே, அத்தீவில் உள்ள மலை உச்சிக்கு அவளை ஊர்வலமாகக் கூட்டிச் செல்வார்கள். மலை உச்சியிலிருந்து கீழே உள்ள பள்ளத்தாக்கில் ஆட்சிபுரிந்த ராணியைத் தூக்கி எறிந்துவிட்டு மீண்டும் மைதானத்தில் ஒன்று கூடுவார்கள். அடுத்த ஈராண்டுகளுக்கு ஆட்சி செய்ய வேண்டிய புதுராணியைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இது அவர்கள் கடைப்பிடிக்கும் உண்மை ஜனநாயகம்!

— சுகுநா